## மனதில் நிற்கும்



## நீரோடி முதல் வட்டக்கோட்டை வரை கடலோர சூழியல் ஆய்வுப் பயணம்

17,18-1-2009

ஜே.எஸ்.அர்லின்சோபியா
நிலம் அணி , இளம் விஞ்ஞானி
குமரி அறிவியல் பேரவை
புனித பிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளி,
வேங்கோடு

‘எண்ணிலா வுயிர்கள் வாழ இடந்தரும்
திண்ணிய நாவாய் கூட்டம் திரிந்திடும்
எண்ணிலா இரத்தினங்கள் இதனுள்ளே பிறந்திடும்
கண்ணுரும் கடலின் காட்சிதான் என்னே
கவின்மிகு கடலின் காட்சிதான் என்னே

இத்தகு சிறப்புக்குரிய கடலின் சூழியல் ஆய்வுப் பயணத்தினை குமரி அறிவியல் பேரவை இளம் விஞ்ஞானிகள் ஆய்வுத்திறனை வளர்ப்பதற்காக ஏற்பாடு செய்திருந்தது. குட்டக்குழி மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு ஆய்வுப்பயணம் சிறப்பான தொடக்க விழாவுடன் நடைபெற்றது.

நீரோடி கடற்கரையை அடைந்தபோது ஏசல்டா என்னும் ஆசிரியை வரவேற்பு அளித்து கடல்பகுதியையும் இயற்கை அமைப்பையும் பற்றி விளக்கினார். தற்போது உள்ள காலநிலையில் ‘சொறி’ என்ற புது வகை மீன் மட்டுமே கிடைக்கிறது. என்றும் ஜீலை ஆகஸ்ட் போன்ற மாதங்களில் வாளை மீன் அதிகமாக கிடைப்பதாகவும் தெரிவித்தார். கடந்த 40 வருடத்தில் கடலானது 75 மீட்டர் நிலப்பரப்பில் கரைப்பரப்பை நெருங்கி வந்துள்ளதாகக் அதிர்ச்சியுட்டும் தகவலினை கூறினார். இங்கு வசிக்கின்ற மக்களின் வீடுகளிலிருந்து வெளிறேும் வீட்டுகழிவுகள் கடலினில் கலக்கப்படுவதை காண முடிந்தது.கழிவு மேன்மைக்காக எந்த வசதியும் செய்துதராததால் நாங்கன் கடலில் கொட்டுகிறோம் என்றும் அதனால் கரைப்பகுதியிலிருந்து மீன் நீங்கி காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

திரு.ஜோபிரகாஷ் கூறுகையில் ஆமைகள் தற்போது அழிந்து வருவதாகவும் அவைகள் தற்போது இனப்பெருக்கம் செய்வது குறைந்து விட்டதாகவும் கூறினார் கடற்கரையில் நிறைய கல் போட்டிருப்பதாலும் மக்கள் அதிகமாக வசிப்பதாலும் தான் ஆமைகள் கடற்கரைக்கு வருவதில்லை என்று கூறினார்.

வள்ளன்விளையை அடைந்தபோது புனிதயூதா நடுநிலைப்பள்ளயின் தலைமையாசிரியர் நிக்கல்சன் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மீன்பிடித்தல் தொழில் செய்யும் தொழிலாளர்கள் கூறுகையில் ஜீன், ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் கிளாத்தி சின்னசுறா போன்ற மீன்கள் கிடைப்பதாகவும் கடல் நீரானது 20 மீட்டர் நிலப்பரப்பை நோக்கி வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தனர். ஒருமுறை மீன் பிடிக்க கடலில் 3 நாட்கள் தங்குவதாகவும் விசைப்படகுகள் 50 முதல் 55 அடி வரை நீளமுடையதாக இருக்கும் எனவும் தாங்கள் மீன்பிடிக்க லைட்-ஐ பயன்படுத்துவதாகவும் கூறினார்.

நித்திரவிளையில் பேட்ரியாட்ரிக்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் திரு.ராஜேஸ் சிறப்பான வரவேற்புடன் மதியம் உணவு தரப்பட்டது. பார்த்திபபுரம் பகுதியில் புராதனமான ஆலயம் அதன் கலை அம்சம் பற்றி அறிந்து கொண்டோம். தேங்காய்பட்டணத்தில் ஆறும் கடலும் கலக்கும் பகுதியான கழிமுகத்தினை ஆய்வுசெய்தோம்.

இனயம் புத்தன்துறையில் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை அருள்சகோதரி பெலின்டா சிறப்பான வரவேற்புடன் கடல் பகுதியில் மீனவர்களுடன் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் இரவில் கரையை எவ்வாறு வந்தடைகிறார்கள் என்று கேட்கையில் முன்பு நட்சத்திரத்தைப் பார்த்து வந்தடைவதாகவும் தற்போது கணிணியைப் பயன்படுத்தி அதன் ஒளித் திரையைப் பார்த்து கரையை அடைவதாகக் கூறினார.

கருங்கல் அன்னை மருத்துவமனை வளாகத்தில் சுங்கத்துறை அதிகாரி திருமதி. கிளாடிஸ் லில்லி வரவேற்பு அளித்தார். ஒரு சிறந்த விளையாட்டு வீரராக வளர தன்னுடைய விடாமுயற்சியும் கடின உழைப்புமே காரணம் எனக்கூறினார்.

குளச்சல் பகுதியில் அங்கு வாழும் மீனவர் ஒருவர் சுனாமியால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கிக் கூறினார். சுனாமியால் இறந்த 414 உடல்களை ஒரே பகுதியில் ஒரே பகுதியில் புதைக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட நினைவுச் சின்னத்தினைக் கண்டோம். இச்சின்னமானது எங்களை உள்ளங்களை அழவைத்தது. இதுவே மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற ஓர் எண்ணம் தோன்றியது.

சுமார் 6.30 மணியளவில் விவேகானந்தா மெட்ரிக் பள்ளியினை அடைந்த போது முதல்வர் ஸ்ரீகுமார் தலைமையில் வரவேற்று உபசரித்தனர். விவாத அரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன அந்நிகழ்வு ஒற்றுமை உணர்வினை ஏற்படுத்தியது.

மறுநாள் காலை ஆசிரியர் திரு. சதீஸ்குமார் 6 மணியளவில் யோகா பயிற்சியினை அளித்தார். இப்பயிற்சியானது கட்டுப்பாடு சுவாசப் பயிற்சிகள் பொறியடக்கம் தியானம்

போன்ற சிந்தனைகளையும் எங்கள் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வையும் தருவதாகவும் அமைந்தன.

8.30 மணியளவில் நடைபெற்ற 2-ம் நாள் தொடக்க விழாவில் விவேகானந்தா மெட்ரிக் பள்ளி தாளாளர்திரு.மணிகண்டன் அவர்கள் நினைவுப்பரிசு ஓன்றினை அமைப்பாளர் திரு.வேலையன் அவர்களுக்கு வழங்கி வழிஅனுப்பி வைத்தார்.

கடியப்பட்டிணத்தில் வள்ளி ஆறு கடலில் கலக்கும் பகுதியில் 250 ஹெக்டேருக்கு மேல் மீன்வளம் நிறைந்து உள்ளதாகவும் கனிம வளம் உள்ள பகுதியென்றும் ஆற்று மண்ணில் சிலிகான் ,தோரியம் போன்ற கனிமங்கள் காணப்படுகின்றன என்றும் விஞ்ஞானி பென்சிகர்ராஜன் விளக்கினார். அரியவகைமணல் என்பதால் இப்பகுதியிலிருந்து ஆற்றுமணலை எடுத்து வந்தோம்.

முட்டம் கடற்கரையை அடைந்தபோது டாக்டர்ஆறுமுகம் மற்றும் டாக்டர்.அருள் பிரகாஷ் ஆகியோா் அங்கு வருகை தந்து கலந்துரையாடினார்.

டாக்டர்ஆறுமுகம் கூறுகையில் ஒரு வருடத்திற்கு 1.7 மி.மீ கடல் நீர் மட்டம் உயருகிறது நமது மாவட்டத்தில் 6500000 மக்கள் தொகையில் 80000 மக்கள் வாகனங்களைப் பயன்படுத்துவதாகவும் இதனால் காற்று பெருமளவில் மாசடைகிறது எனவும் கூறினார்.டாக்டர்அருள்பிரகாஷ் தண்ணீரால் மக்களுக்கு பரவக்கூடிய நோய்களைப் பற்றி விளக்கினார்.

இராஜாக்கமங்கலம் துறையை அடைந்தோம் கடல் ஆமைகள் அதிகம் இங்குள்ள மீனவர்கள் துண்டில் வளைவினால் நாங்கள் மிகுந்க பயன் அடைவதாகக் கூறினார்கள் . துண்டில் வளைவினால் அவர்களுக்கு அதிகமாக மீன்கள் கிடைப்பதாகவும் கடல் கொந்தளிப்பினைத் தடுக்கின்றன எனவும் கூறினாாகள்.

சொத்தவிளை கடலோரத்தல் திரு.ரகுவரன் குடும்பத்தினர் சிறப்பான வரவேற்பளித்து மதிய உணவு அளித்தார்.

மணக்குடியை அடைந்தபோது திரு.மங்காவிளை இராஜேந்திரன் அவர்கள் வரவேற்றாா. உப்புத் தன்மை அதிகரிக்க அதிகரிக்க அங்கு மீன்கள் வர்ழாது கடலுக்கு உயிர் கொடுப்பது ஆறுகள் ரைஸோர்போரா எனும் தாவரங்கள் கழிமுகங்களில் வாழ்வதாகவும் காலிபிளவர் எனும் ஓர வகை காடானது நீர் வளத்தை அதிகரிக்கச் செய்வதாகவும் கூறினார். வெளிநாட்டு பறவைகள் இந்தியாவிற்கு வரும்போது இனப்பெருக்கம் செய்யாது அதிலிருந்து அயல்நாட்டு பறவை அடையாளம் காண முடியும் என்றார். அலையாத்திக்காடுகள் பற்றி விளக்கினார். பைன் மரங்கள் பற்றியும் அதிலிருந்து கரன்சி ருபாய் நோட்டுகள் தயாரிக்கப் படுகின்றன் என்பதையும் தெரிந்துகொண்டோம்

வட்டக்கோட்டையை அடைந்தபோது வழக்கறிஞர் ராஜதுரை வரவேற்றார்

ரவி என்பவர் வட்டக்கோட்டையினைப் பற்றி விளக்கி கூறினார். திருவிதாங்கூர் மன்னர் ராஜா மார்த்தாண்டவர்மன் 1741-ல் வட்டக்கோட்டையினைக் கட்டினார் 3 ஏக்கர் 94 மீட்டர் பரப்பளவு உடையது என்ற தகவலை தெரிவித்தார். இது பண்டையக் கட்டடக்கலை சிறப்பை உணர்த்துகிறது.

குமரிமுனை கடல் பகுதியில் குவிந்துள்ள பிளாஸ்டிக் கழிவுகளை கண்டு அதிர்ச்சி அடைந்தோம்.

விவேகானந்த கேந்ராவை அடைந்த போது விரிவாக்க அலுவலர் சரஸ்வதி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது சூழியல் ஆய்வு பயணம் நிறைவு விழாவும் நடைபெற்றது

இந்த கடல் சூழியல் ஆய்வு பயணத்தின் வாயிலாக நாங்கள் அறிந்து கொண்டவை

- ☹ ஆய்ந்து அறிதல் பற்றி அறிய முடிந்தது
- ☹ ஒரு வருடத்திற்கு 1.7மி.மீ நீர் மட்டம் உயருகிறது.
- ☹ கண்டவை கேட்டவை ஆவணப்படுத்தும் முறைகள்
- ☹ துண்டில் வளைவினைப் பற்றியும் அதன் பயன்களும்
- ☹ கடல் ஆமைகள் அழிந்து வருவதையும் அதன் காரண்ங்கள்
- ☹ வீட்டுக்கழிவுகள் சாக்கடைக்கழிவுகள் ஆலைக்கழிவு விளைவுகள்
- ☹ உப்பு தன்மை அதிகரிக்க அதிகரிக்க அங்கு மீன்கள் வாழும் சூழல் மாறிவிடும்
- ☹ கடல் வளங்கள்
- ☹ சுனாமியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தடுக்க நாம் என்ன செய்யலாம்
- ☹ சுர புன்னை போன்ற அரிய வகை மரங்களையும் உயிரிகளையும் அறிந்து கொள்ள முடிந்தது.

**வேண்டுகோள்**

ஏ.வி.எம் கால்வாய் சீரமைப்பு செய்து நீர் வழி படகுப்போக்குவரத்து ஏற்படுத்தினால் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு சுற்றுலா மேம்பாடு அடையவும் கடலோர துய்மை பாதுகாக்கவும் முடியும்..

இவ்வாய்ப்பினை தந்த குமரி அறிவியல் பேரவைக்கு நன்றியுடன் இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.